PRIMARY SCHOOL

SECOND SEMESTRAL ASSESSMENT

TAMIL LANGUAGE PAPER 2013

PRIMARY 3 - COMPOSITION

Name : ______________________________ (     )

Marks: ____ / 20                                        Parent's Signature : ____________________

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 60-70 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. படத்தின் அடியில் கொடுக்கப்பட்டுள்ள உதவிச் சொற்களைக் கட்டுரை எழுதுவதற்கு நீ உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| வீட்டுக்கு விருந்தினர்களை | நிலை தடுமாறி |
| 'குவே டார்ட்'டுகள் | சுக்குநூறாகச் சிதறியது |
| கண்ணாடி ஜாடியில் | சாப்பிட முடியாமல் வீணானது |
| கொள்ளை ஆசை | அடிபட்ட வலி |
| செய்தித்தாட்களை அடுக்கி | கண்கலங்கி நின்றான் |

# PRIMARY SCHOOL

## SECOND SEMESTRAL ASSESSMENT 2 - 2013

## TAMIL LANGUAGE

## PAPER 2

## PRIMARY 3

Name : ______________________

Class : Primary 3

Date :

Parent's Signature : ______________________

| |
|---|
| / 45 |

Do not open this booklet until you are told to do so.

Follow all instructions carefully.

**ANSWER ALL THE QUESTIONS.**

| | |
|---|---|
| **My Result :** | |
| **Class Average :** | |
| **Highest in class :** | |

P3 CA-2

## 01. ஒலி வேறுபாடு (5 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களைக் கவனமாகப் படித்துவிட்டுச் சரியான விடையின் எண்ணைக் அடைப்பினுள் எழுது.

1. ____________________ பார்ப்பதற்கு அழகாக இருந்தது.

   1) கிலி   2) கிளி   (   )

2. பள்ளி மணி ____________________ கேட்டதும் மாணவர்கள் தங்கள் வகுப்பறையை விட்டு வெளியே வந்தார்கள்.

   1) ஒலியை   2) ஒளியை   (   )

3. நாங்கள் கடல் ____________________ மேலே எழுவதைப் பார்த்தோம்.

   1) அலை   2) அழை   (   )

4. சற்று முன்னர் கனத்த ____________________ பெய்தது.

   1) மலை   2) மழை   (   )

5. ____________________ சுவரில் ஓடியதைக் கண்டு அக்கா கத்தினார்.

   1) பல்லி   2) பள்ளி   (   )

தெரிவிடைக் கருத்தறிதல்
பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

சேகரன் ஒரு நாய் வளர்த்தான். அதன் பெயர் விக்கி. விக்கி எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும். சேகரன் ஆரம்பத்தில் மிகவும் சோம்பேறியாக இருந்தான். விக்கி அவர்களுடைய வீட்டிற்கு வந்த பின் தான் சேகரன் மிகவும் சுறுசுறுப்பானான். அவன் தினமும் மாலையில் தன் நாயுடன் பூங்காவுக்குச் செல்வான்.

ஒரு நாள் அவன் வழக்கம் போல் பூங்காவுக்குச் சென்றான். வழியில் விக்கி ஓர் இடத்தைவிட்டு நகர மறுத்தது. அதன் செயல் சேகரனுக்கு விநோதமாக இருந்தது. அதனால், சேகரன் விக்கியைப் பிடித்திருந்த கயிற்றை விட்டான். விக்கி சிறிது தூரம் ஓடிய பின் ஓர் இடத்தைத் தோண்ட ஆரம்பித்தது. சேகரன் அதைப் பின் தொடர்ந்தான். அப்போது குழியிலிருந்து ஒருவித துர்நாற்றம் வந்தது.

கீழ்க்காணும் வினாக்கள் மேற்கொண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் ஏற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது. (5)

6. சேகரனின் சுறுசுறுப்புக்கு காரணம் என்ன? ( )

1) நாயின் சுறுசுறுப்பு
2) நாயை வளர்ப்பது
3) சேகரனின் அம்மா
4) நாயின் குறும்பு

7. சேகரன் எப்போது பூங்காவுக்குச் செல்வான்? ( )

1) தினமும் காலையில்
2) நாள்தோறும் மாலையில்
3) ஒவ்வொரு வாரமும்
4) எப்போதும்

8. சேகரனின் வழக்கம் என்ன? ( )

1) தினமும் நாயுடன் விளையாடுவது
2) தினமும் நாயை கவனிப்பது
3) தினமும் நாயுடன் பூங்காவுக்குச் செல்வது
4) தினமும் பூங்காவில் விளையாடுவது

9. எது சேகரனுக்கு விநோதமாக இருந்தது? ( )

1) நாய் குரைப்பது
2) நாய் நகர மறுப்பது
3) நாய் ஓடுவது
4) நாய் தன்னுடன் வருவது

10. நாய் தோண்டியபோது என்ன நிகழ்ந்தது? ( )

1) துர்நாற்றம் வீசியது
2) நறுமணம் வீசியது
3) எலும்பு வந்தது

03. மூவிடப்பெயரும் வினையும் ( 5 மதிப்பெண்கள் )

| |
|---|
| கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு ஏற்ற பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோட்டில் எழுது. |

11. ராணியும் கீதாவும் சீன நடனம் ________________ __________.

12. பெரியம்மா செய்த கேசரியை ________________ ____________ சாப்பிட்டு முடித்தாள்.

13. ஆனந்தன் தனது நண்பர்களுடன் பூப்பந்து

__________________________.

14. நீயும் அமினாவும் ஏன் தாமதமாக __________________ ________?

15. போட்டியில் முதல் பரிசு பெற்றதால் ______________ ______________ குதித்து மகிழ்ந்தார்கள்.

## 04. முன்னுணர்வுக் கருத்தறிதல் ( 5 மதிப்பெண்கள் )

| |
|---|
| கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு ஏற்ற பொருத்தமான சொல்லின் எண்ணை அடைப்பினுள் எழுது. |

ஆனந்திக்குச் சொத்தைப் பல் இருந்தது. அதனால், அவளுக்குப் பல் வலி 16. ( ). அதை அவள் தன் 17. ( ) சொன்னாள். உடனே, ஆனந்தியின் அன்னை அவளைப் பல் மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். அங்குச் சென்றதும், ஆனந்தி தனது சொத்தைப் பல்லைப் பல் மருத்துவரிடம் 18. ( ). அவர் ஆனந்தியின் சொத்தைப் பல்லைப் பிடுங்கினார். அவள் வலியால் 19. ( ). பல் மருத்துவர் அவளுக்குப் பல அறிவுரைகள் கூறினார். "அளவுக்கு மீறி 20. ( ) சாப்பிட வேண்டாம்," என்று அவர் அவளிடம் கூறினார் ஆனந்தி வீட்டுக்குச் சென்று ஓய்வு எடுத்தாள்.

| | | |
|---|---|---|
| 1. காட்டினாள் | 2. கடித்தாள் | 3. அம்மாவிடம் |
| 4. மிட்டாய்கள் | 5. ஏற்பட்டது | 6. துடித்தாள் |
| | 7. பழங்கள் | |

05. வேற்றுமை உருபு (5 மதிப்பெண்கள்)

| |
|---|
| பின்வரும் வாக்கியங்களைக் கவனமாக்ப் படித்துவிட்டுச் சரியான விடையின் எண்ணைக் அடைப்பினுள் எழுது. |

21. முன்னொரு ______________ ஒரு மயிலுக்குத் தோகை இல்லை.

1) காலத்தின் 3) காலத்தை
2) காலத்தில் 4) காலத்துக்கு ( )

22. ஒரு நாள் அது விருந்துக்குப் போக எண்ணி தன் நண்பன் ______________ சென்றது.

1) சேவலிடம் 3) சேவலை
2) சேவலால் 4) சேவலுக்கு ( )

23. "உன் ______________ எனக்குக் கடனாகக் கொடு," என்று கேட்டது.

1) தோகைக்கு 3) தோகையை
2) தோகையின் 4) தோகையோடு ( )

24. நண்பனுக்கு உதவு வேண்டும் என்ற ______________ சேவல் தன் தோகையை மயிலுக்குக் கொடுத்தது.


1) எண்ணத்தின் 3) எண்ணத்துடைய
2) எண்ணத்தை 4) எண்ணத்தில் ( )

25. தோகையைப் பெற்ற மயில் ______________ விருந்துக்குச் சென்றது.

1) மகிழ்ச்சியால் 3) மகிழ்ச்சியோடு
2) மகிழ்ச்சியிலிருந்து 4) மகிழ்ச்சிக்கு ( )

06. கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் ( 3 மதிப்பெண்கள்)

# தேசிய தின கலைநிகழ்ச்சி



தேதி : சனிக்கிழமை, 14 ஆகஸ்ட் 201

நேரம் : இரவு 7.00 மணி

இடம் : பீஷான் சமூக மன்றம்

| | |
|---|---|
| இரவு 7.00 மணி | தேசியப்பாடல்கள் |
| இரவு 7.30 மணி | இந்திய நடனம் |
| இரவு 7.45 மணி | மலாய் நடனம் |



சிறப்பு அங்கம் :



கோமாளியின் நகைச்சுவைக் காட்சி

சுவைநீரும் பலகாரங்களும் கொடுக்கப்படும்!

அனைவரும் வருக !

பின்வரும் வாக்கியங்களைக் கவனமாகப் படித்துவிட்டுச் சரியான விடையின் எண்ணை அடைப்பினுள் எழுது.

26. பீஷான் சமூக மன்றத்தில் என்ன கொண்டாடப்படுகிறது?

(1) பல் இன நடனங்கள்

(2) தேசிய தின கலைநிகழ்ச்சி

(3) கோமாளியின் நகைச்சுவைக் காட்சி ( )

27. தேசியப்பாடல்கள் எத்தனை மணிக்குத் தொடங்கும்?

(1) காலை 7.00 மணிக்கு

(2) இரவு 7.30 மணிக்கு

(3) இரவு 7.00 மணிக்கு ( )

28. எல்லாருக்கும் என்ன கிடைக்கும்?

(1) சுவைநீர்

(2) பலகாரங்கள்

(3) சுவைநீரும் பலகாரங்களும் ( )

29. நிகழ்ச்சியின் சிறப்பு அங்கம் என்ன?

( 1 ) தேசிய தினம்

( 2 ) நகைச்சுவைக் காட்சி

( 3 ) மலாய் நடனம்

30. நிகழ்ச்சியில் யார் கலந்து கொள்ளலாம்?

( 1 ) பீஷான் மக்கள்

( 2 ) எல்லோரும்

( 3 ) இந்தியர்கள்

## செய்யுள் ( 4 மதிப்பெண்கள் )

| |
|---|
| பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோட்டில் எழுது. |

31. ஓதுவது ______________ __________ ___.

32. ______________________ ______ ஒழுகு.

33. தந்தை தாய் ______________ ______________.

34. ______________________ _____ மறவேல்.

35. ஔவியம் _________________________.

36 எண்ணெழுத்து ________________________.

| | | |
|---|---|---|
| நல்லது | ஒழியேல் | காப்பாற்று |
| பேசேல் | | இகழேல் |
| ஒப்புரவு | நன்றி | பேண் |

## 08. சுயவிடைக் கருத்தறிதல் ( 10 மதிப்பெண்கள் )

பகுதியைக் கவனமாகப் படி.

சேகர் தனது படுக்கையைவிட்டுத் துள்ளி எழுந்தான். அன்று தந்தையர் தினம். சேகர் தனது தந்தையுடன் வீட்டின் **அருகில்** உள்ள சமூக மன்றத்துக்குச் சென்றான். அங்கு நடைபெற்ற பட்டம் செய்யும் போட்டியில் இருவரும் **கலந்துகொண்டனர்**. பட்டங்கள் பல வடிவங்களில் மிக அழகாகச் செய்யப்பட்டன. சேகரும் அவனது அப்பாவும் விமான வடிவில் ஒரு பட்டத்தைச் செய்தனர்.

சேகரும் அவனது தந்தையும் செய்த பட்டத்துக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. சேகர் **ஆனந்தத்தில்** துள்ளிக் குதித்தான். அதன்பிறகு, சேகரின் அப்பா அவனைப் பூங்காவுக்கு அழைத்துச் சென்றார். அங்கே, அவர்கள் செய்த பட்டத்தைப் பறக்க விட்டனர். தாங்கள் செய்த பட்டம் மிக உயரத்தில் பறந்தபோது சேகருக்கும் அப்பாவுக்கும் மிகவும் பெருமையாக இருந்தது.

கேள்விகள்:

31. சேகர் காலையில் எப்படி எழுந்தான்?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

38. அப்பாவும் சேகரும் எதனால் சமூக மன்றத்துக்குச் சென்றார்கள்?

39. சேகரும் அவன் தந்தையும் செய்த பட்டத்திற்கு எத்தனையாவது பரிசு கிடைத்தது ?

40. போட்டி முடிந்ததும் அப்பாவும் சேகரும் ஏன் பூங்காவிற்குச் சென்றனர்?

41 இருவரும் ஏன் பெருமை அடைந்தனர்?

09. <u>சொற்பொருள் (3 மதிப்பெண்கள் )</u>

கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களுக்குச் சரியான பொருள் தரும் விடையைத் தேர்ந்தெடுத்து, கோடிட்ட இடத்தில் எழுது.

42. அருகில் - ______________________

43. கலந்துகொண்டனர் - ______________________

44. ஆனந்தத்தில் - ______________________

45. வடிவில் - ______________________

| | | |
|---|---|---|
| மகிழ்ச்சியில் | ஓரத்தில் | பங்கெடுத்தனர் |
| வண்ணத்தில் | உருவத்தில் | |
| ஆர்வத்தில் | பக்கத்தில் | சேர்ந்துகொண்டனர் |

(முற்றும்)

**P3**
**TESTPAPER 4**

விடைகள் ( Primary 3 - SA 2 2013 )

1. (2) 2. (1) 3. (1) 4. (2) 5. (1)

6. (1) 7. (2) 8. (3) 9. (2) 10. (1)

11. ஆடினார்கள் 12. சிறுமி, ஏதாவது ஒரு பெண்ணின் பெயர்

13. விளையாடினான் 14. வருகிறீர்கள் 15. அவர்கள், மாணவர்கள்

16. (5) 17. (3) 18. (1) 19. (6) 20. (4)

21. (2) 22. (1) 23. (3) 24. (4) 25. (3)

26. (2) 27. (3) 28. (3) 29. (2) 30. (2)

31. ஒழியேல் 32. ஒப்புரவு 33. பேண் 34. நன்றி 35. பேசேல் 36. இகழேல்

37. சேகர் காலையில் படுக்கையைவிட்டுத் துள்ளி எழுந்தான்.

38. சமூக மன்றத்தில் நடைபெற்ற பட்டம் செய்யும் போட்டியில் இருவரும் கலந்து கொண்டதால், அப்பாவும் சேகரும் சமூக மன்றத்துக்குச் சென்றனர்.

39. சேகரும் அவன் தந்தையும் செய்த பட்டத்திற்கு இரண்டாம் பரிசு கிடைத்தது.

40. போட்டி முடிந்ததும் அப்பாவும் சேகரும் அவர்கள் செய்த பட்டத்தைப் பறக்க விடப் பூங்காவிற்குச் சென்றனர்.

41. அவர்கள் செய்த பட்டம் மிக உயரத்தில் பறந்ததால் இருவரும் பெருமை அடைந்தனர்.

42. பக்கத்தில் 43. பங்கெடுத்தனர் 44. மகிழ்ச்சியில் 45. உருவத்தில்